# 1 இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்



## அறிமுகம்

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்த போர்த்துக்கேயரிடமிருந்து நாட்டை விடுவிக்க வேண்டுமாயின் பலம்வாய்ந்த கடற்படை அவசியம் என்பதை கண்டி இராசதானியின் அரசர்கள் உணர்ந்திருந்தனர். இதனால் இரண்டாம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் துணையைப் பெற்றுக்கொண்டான். எனினும் மன்னனுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு மாறாகச் செயற்பட்ட ஒல்லாந்தர், போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருந்த பிரதேசங்கள் பலவற்றில் தமது அதிகாரத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்தனர். அதன் விளைவாக 1658 ஆம் ஆண்டில் தீவின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது ஆட்சி நிறுவப்பட்டது. அது முதல் 1796 ஆம் ஆண்டு வரை ஒல்லாந்தர் அப்பிரதேசங்களை ஆட்சி செய்தனர். இந்த அத்தியாயத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தர் ஆட்சியை நிறுவியமை, கண்டி இராசதானியுடனான அவர்களது தொடர்பு, ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் துல்லியமாகத் தெரியும் இயல்புகள் என்பவற்றில் உங்களது கவனம் செலுத்தப்படுகிறது.

## 1.1 இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்

### ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வருதல்

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஆசியாவிலிருந்து கொண்டுசென்ற வாசனைப் பொருள்கள் உட்பட வர்த்தகப் பொருள்களைப் போர்த்துக்கலில் லிஸ்பன் துறை முகத்தில் விலை கொடுத்து வாங்கிய ஒல்லாந்தர், அவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கும் வர்த்தகமொன்றை மேற்கொண்டனர். ஒல்லாந்து அக்காலத்தில் ஸ்பானியரின் கீழ் இருந்தது. ஸ்பானியர்கள் உரோமன் கத்தோலிக்கர்களாக இருந்ததுடன் ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தினராக இருந்தனர். மத ரீதியாக இரு பிரிவினரிடையேயும் கருத்து முரண்பாடுகள் நிலவியதால், ஒல்லாந்தர் ஸ்பானியருக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அத்தோடு ஸ்பானிய மன்னனான இரண்டாம் பிலிப் அரச உரிமையொன்றின் மூலம் போர்த்துக்கலின் அரசனானதால் ஒல்லாந்தருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் விளைவாக ஒல்லாந்தர் லிஸ்பன் துறைமுகத்திற்கு வருவதை இரண்டாம் பிலிப் மன்னன் தடைசெய்தான். இவ்வாறு ஒல்லாந்தரது கப்பல்கள் லிஸ்பன் துறைமுகத்திற்கு வரமுடியாத நிலை ஏற்பட்டதால் அவர்களது வர்த்தகத்திற்குத் தேவையான வாச னைப் பொருள்கள் உள்ளிட்ட வர்த்தகப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவை உற்பத்தி செய்யப்படும் ஆசிய நாடுகளுக்கு வருவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்து ஒரு நூற்றாண்டு காலம் வரை கடல்வழித் தொடர்பான விளக்கத்தை ஐரோப்பியர் தெரிந்து கொள்வதைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர்.



உரு 1.1 கீழைத்தேச ஒல்லாந்த வர்த்தக சங்க (VOC) இலச்சினை

இக்காலகட்டத்தில் போத்துக்கேயர் தமக்கு நம்பிக்கையானவர்களைத் தவிர சந்தேகத்திற்குள்ளான ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் ஆகியோர் போர்த்துக்கேயக் கப்பலில் ஆசியாவுக்கு வருவதற்கு இடமளிக்கவில்லை. எனினும் ஒல்லாந்தர், ஒற்றர்கள் மூலமும் ஏனைய வழிகளிலும் 1595 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்த கடல்வழியை அறிந்துகொண்டனர். இதற்கமைய 1602 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஒல்லாந்த வர்த்தக சங்கங்கள் பல ஆசியாவுக்கு வந்தபோதிலும், வர்த்தகப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் அவற்றிற்கிடையே போட்டி நிலவியது. மேலும் ஒரு வர்த்தக சங்கத்திற்கேனும் ஒல்லாந்திற்காக ஆசியாவில் செயற்படத் தேவையான முறையான அதிகாரம் இருக்கவில்லை. இதனைக் கருத்திற்கொண்ட ஒல்லாந்த ஆட்சியாளன் 1602 ஆம் ஆண்டு பல ஒல்லாந்த சங்கங்களை இணைத்து ஒல்லாந்தக் கீழைத்தேச வர்த்தக சங்கம் என்ற VOC*, சங்கத்தை நிறுவினான். அந்தச் சங்கத்தின் அனுமதிப்பத்திரத்திற்கு அமைய ஒல்லாந்த அரசின் சார்பாக ஆசியாவில் வர்த்தகத்தை மேற்கொள்ளவும் நாடுகளைக் கைப்பற்றவும் கோட்டைகளை அமைக்கவும் ஆளுநர்களை நியமிக்கவும் உரிய பிரதேசங்களை நிருவகிக்கவும் VOC சங்கத்திற்கு அனுமதி கிடைத்தது.

1602 ஆம் ஆண்டின் பின்னர் ஒல்லாந்த கீழைத்தேச வர்த்தக சங்கம் பலமடைந்ததுடன், முக்கிய கப்பற் குழுக்களை ஆசியாவுக்கு அனுப்பவும் ஒல்லாந்தரால் இயலுமானதாக இருந்தது. இவ்வாறு VOC சங்கத்தின் கீழ் வருகைதந்த ஒல்லாந்தர் ஜாவாத் தீவில் பத்தேவியா என்ற இடத்தில் தமது தலைமையகத்தை நிறுவியதுடன் தென்கிழக்கு ஆசியத் தீவுகள், சில இந்தியக் கடற்கரைப் பிரதேசங்கள் என்பவற்றில் தமது அதிகாரத்தைக் கட்டியெழுப்பினர். இந்துசமுத்திரத்தில் தமது வர்த்தகத்தைக் கட்டியெழுப்பும்போது கட்டாயமாகப் போர்த்துக்கேயருடன் மோதவேண்டிய நிலை ஒல்லாந்தருக்கு ஏற்பட்டது.

### கண்டி அரசர்கள் ஒல்லாந்தரின் உதவியை நாடுதல்

ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வந்து நீண்ட காலம் செல்லும் முன்னர் 1602 ஆம் ஆண்டு ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்ஜன் எனும் ஒல்லாந்தத் தளபதி மூன்று கப்பல்களுடன் இலங்கையின் கிழக்குப் பகுதிக்கு வந்து மட்டக்களப்பில் தரையிறங்கினான். அவன் கண்டி இராசதானிக்குச் சென்று 1602 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் விமலதர்ம சூரியனைச் சந்தித்தான். இக்காலகட்டத்தில் போர்த்துக்கேயரின் நடவடிக்கையால் விமலதர்மசூரியன் மிகவும் அதிருப்தி அடைந்திருந்தான். எனவே போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் துணையைப் பெற அவன் விருப்பம் தெரிவித்தான்.

ஸ்பில்பேர்ஜன் இங்கிருந்து சென்று மூன்று மாதங்களின் பின்னர் சிபெல் த வர்ட் என்பவனின் தலைமையில் தூதுக் குழு ஒன்று விமலதர்மசூரிய மன்னனைச் சந்திக்க வந்தது. புதிய தூதுவன் ஸ்பில்பேர்ஜனின் இனத்தவன் என்பதை அறிந்துகொண்ட மன்னன் கண்டியில் அவனைக் கோலாகலமாக வரவேற்றதுடன், போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தினான்.

VOC* - Vereenigde Oost Indische Compagine என்னும் டச்சுச் சொல்லின் சுருக்கமாகும்.

எனினும் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அரசன் முன்னிலையில் மரியாதையின்றி சிபெல் த வர்ட் பேசியதால், அவனுக்கும் அரசனது குழுக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாகத் துரதிர்ஷ்டவசமாக சிபெல் த வர்ட் உயிரிழந்தான். இதன் காரணமாக போர்த்துக்கேயரை வெளியேற்றும் விடயத்தில் ஒல்லாந்தரின் உதவியைப் பெறும் மன்னனின் நோக்கம் தோல்வியடைந்தது.



உரு. 1.2 ஸ்பில்பேர்ஜன் முதலாம் விமலதர்மசூரியனைச் சந்தித்தமை

விமலதர்மசூரிய மன்னனின் பின்னர் அவனது சகோதரனான செனரத் அரசனானான். செனரத் மன்னனின் காலத்தில் ஒல்லாந்தத் தூதுக்குழுக்கள் இரண்டுடன் பேச்சு வார்த்தை நடத்திய போதிலும் மன்னன் எதிர்பார்த்த விதத்தில் சாதகமான விளைவு கள் கிடைக்கவில்லை.

## இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான உடன்படிக்கை

செனரத் மன்னனுக்குப் பின்னர் அவனது மகனான இரண்டாம் இராஜசிங்கன் அரசனானான். போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்ற அவன் உறுதியுடன் செயற்பட்டான். இதற்காகப் பலம்வாய்ந்த கடற்படையைக் கொண்ட ஒல்லாந்தரின் துணையை நாடினான். இதன்படி ஒல்லாந்தரின் கிழக்கிந்திய மத்திய நிலையமாகிய பத்தேவியாவின் தூதுவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினான். போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்குத் தமக்கு வழங்கும் உதவிக்குக் கைமாறாகக் கறுவா வர்த்தகத்தின் உரிமையையும் கிழக்குக் கடற்கரையில் ஒரு துறைமுகத்தையும் வழங்குவதற்கு மன்னன் இணக்கம் தெரிவித்தான். ஒரு ஐரோப்பிய இனத்தவருக்குப் பதிலாக வேறொரு ஐரோப்பிய இனத்தவரை இந்நாட்டிற்கு வரவழைத்தல் அரசனின் நோக்கமாக இருக்கவில்லை. மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விளைவாக 1638 ஆம் ஆண்டு மே மாதம் மன்னனின் படையும் ஒல்லாந்தரும் இணைந்து மட்டக்களப்பில் போர்த்துக்கேயரது கோட்டையைத் தாக்கினர். சில தாக்குதல்களின் பின்னர் அங்கிருந்த போர்த்துக்கேயரை வெளியேற்ற அவர்களால் முடிந்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த இரண்டாம் இராஜசிங்க மன்னன் 1638 ஆம் ஆண்டு மே மாதம் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டான்.

1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் முக்கிய விடயங்கள்

- ❖ போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கு கண்டி மன்னனுக்கு உதவி வழங்க ஒல்லாந்தர் உடன்படல்.
- ❖ போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போரில் ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவை கறுவா, மிளகு, தேன்மெழுகு என்பவற்றை வழங்குவதன் மூலம் நிவர்த்தி செய்ய மன்னன் உடன்படல்.
- ❖ யானைகள் தவிர கண்டி இராசதானியின் ஏனைய வர்த்தகப் பொருள்களைப் பணம் கொடுத்துப் பெறும் ஏகபோக உரிமையை ஒல்லாந்தருக்கு வழங்குதல்.
- ❖ போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளில் மன்னன் விரும்பினால் ஒல்லாந்தரது படையை நிறுத்துவதற்கு உடன்படல்.

## போர்த்துக்கேயரை வெளியேற்றும் போராட்டமும் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது அதிகாரம் நிறுவப்பட்டமையும்

1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் பின்னர் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு மேலும் 20 ஆண்டுகள் சென்றன. அக்காலத்தில் போர்த்துக்கேயரின் கீழிருந்த திருகோணமலை, நீர்கொழும்பு, காலி, களுத்துறை, கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் உட்பட ஏனைய கோட்டைகளைக் கைப்பற்ற ஒல்லாந்தரும் கண்டி இராச தானிப் படையும் நடவடிக்கைகள் எடுத்தன. திருகோணமலை, நீர்கொழும்பு ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றிய பின்னர் மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒல்லாந்தர் தமக்குச் சாதகமான பிரதேசங்களில் கோட்டைகளைக் கைப்பற்றிய பின்னர் 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி மன்னனுக்கு அவற்றை ஒப்படைக்கத் தவறியமையே இதற்கான காரணமாகும்.

ஒல்லாந்தர் ஆரம்பத்திலிருந்து தந்திரமாகவே மன்னனுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் ஒரு உறுப்புரைக்கு அமைய போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளில் ''**மன்னன் விரும்பினால் மாத்திரமே ஒல்லாந்தப் படைகள் நிறுத்தி வைக்கப்படும்**'' என்ற கருத்து இருந்த பொழுதிலும், ஒல்லாந்தர் அதனை மறந்து செயற்பட்டனர். அவர்கள் தாம் கைப்பற்றிய கோட்டைகளில் அரசனைக் கலந்தாலோசியாது படை வீரர்களை நிறுத்திவைத்தனர். நீர்கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களில் கறுவா பெருமளவு விளைந்ததால் அப்பிரதேசங்களில் உள்ள கோட்டைகளை மன்னனுக்குக் கையளிக்காது தாமே வைத்துக்கொள்ள ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர். இதனால் கோட்டைகளில் தங்கி இருந்த ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது மன்னனின் கடமையல்ல என மன்னன் கூறினான். போர்ச் செலவைக் கொடுக்கும் வரையில் கோட்டைகளை மன்னனுக்குக் கொடுப்பதில்லை என ஒல்லாந்தர் கூறினர். இவ்வாறு இரு சாராரிடையேயும் கருத்து வேறுபாடு படிப்படியாக வளர்ந்தது. எனினும் கொழும்பு உள்ளிட்ட கோட்டைகளில் இருந்து போர்த்துக்கேயரை வெளியேற்ற ஒல்லாந்தரின் உதவி தேவைப்பட்டதால் இரண்டாம் இராஜசிங்க மன்னன் மிகவும் பொறுமையுடன் நடந்துகொண்டதாகத் தெரிகிறது.



உரு 1.3 காலிக் கோட்டை

இதற்கிடையில் ஜெராட் ஹல்ப்ட் எனும் தளபதியின் கீழ் பெரிய ஒல்லாந்து கடற்படையொன்று இலங்கைக்கு வந்தது. இதனால் வலிமையடைந்த ஒல்லாந்தர், போர்த்துக்கேயரிடமிருந்து கொழும்பைக் கைப்பற்ற உயரமான இடங்களில் பீரங்கிகளைப் பொருத்திக் கோட்டையைத் தாக்கினர். தளபதி ஹல்ப்ட்டின் மீது பற்றுக் கொண்ட இராஜசிங்க மன்னன் அவனுக்கு உதவியாகப் பாரிய படையொன்றை அனுப்பிவைத்தான். இதனால் இன்னல்களுக்கு உள்ளான போர்த்துக்கேயர் அடிபணிந்து கொழும்புக் கோட்டையின் திறப்பினை ஒல்லாந்தரிடம் கையளித்தனர்.

அதுவரை காலிக் கோட்டையிலிருந்து செயற்பட்ட ஒல்லாந்தர், கொழும்புக் கோட்டையை மேலும் பலப்படுத்தி, அதனைத் தமது தலைமையகமாக்கினர். இது 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையை மீண்டும் மீறுவதாக இருந்தது. இதனால் இராஜசிங்க மன்னன் கோபமடைந்தான். 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் மன்னாரையும் அதன் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டையையும் கைப்பற்றியதுடன் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் அதுவரை நிலவிய போர்த்துக்கேயரது ஆட்சி முடிவுக்கு வந்தது. கைப்பற்றப்பட்ட கோட்டைகளை ஒல்லாந்தர் தாமே வைத்துக்கொண்டனர். போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலை நாட்டுவதே ஒல்லாந்தரின் நோக்கம் என்பதை விளங்கிக்கொண்ட மன்னன், ஒல்லாந்தரது ஆட்சிப் பிரதேசத்தைக் குறைப்பதற்கான உபாயமொன்றை மேற்கொண்டான். அதன்படி



உரு 1.4 யாழ்ப்பாணக் கோட்டை

போர்த்துக்கேயரின் கீழிருந்து, ஒல்லாந்தரால் கைப்பற்றக்கூடியதாக இருந்த பிரதேசங்கள் பலவற்றைக் கண்டி இராசதானியுடன் இணைத்துக்கொள்ள நடவடிக்கையை மேற்கொண்டான். மன்னனின் இந்த உபாயத்தினால் ஒல்லாந்தரால் போர்த்துக்கேயரை விடக் குறைந்த பிரதேசத்தையே கைப்பற்றக்கூடியதாக இருந்தது. ஒல்லாந்தர் கொழும்பு, மாத்தறை, நீர்கொழும்பு, கற்பிட்டி, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் கோட்டைகளை நிறுவினர். அப்பிரதான கோட்டைகள் தவிர்ந்த ஆனையிறவு, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களிலும் கோட்டைகள் பல அவர்களால் நிர்மாணிக்கப்பட்டன. போர்த்துக்கேயருக்குப் பதிலாக வேறு ஐரோப்பிய இனத்தவரை வரவழைத்தமையால் ''**இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல்**'' என்ற உவமைத்தொடர் உருவானது.

### ஒல்லாந்தர் கண்டி இராசதானியுடன் கொண்ட தொடர்பு

இந்நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பிய இனத்தவர்களில் கண்டி இராசதானியுடன் நீண்ட காலம் நல்லுறவு கொண்ட இனத்தவர் ஒல்லாந்தராவர். போர்த்துக்கேயர் கண்டி இராசதானி தொடர்பாகப் பின்பற்றியது ஆக்கிரமிப்புக் கொள்கையாகும். ஆங்கிலேயர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி இருபது ஆண்டுகள் செல்லும் முன்னர் கண்டி இராசதானியைக் கைப்பற்றினர். எனினும் ஒல்லாந்தர் 1658 - 1796 வரை கண்டி இராசதானியுடன் தூதுத் தொடர்பு, கடிதப் பரிமாற்றம் போன்ற தொடர்புகளை வைத்திருந்ததுடன், சந்தர்ப்பம் வாய்த்த பொழுது அந்த இராசதானியை ஆக்கிரமிக்கவும் தயங்கவில்லை. இதனால், ஒல்லாந்தருக்கும் கண்டி இராசதானிக்கும் இடையே ஒருவகையான மாறுபட்ட தொடர்பு நிலவியது.

### இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான தொடர்பு

போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற இரண்டாம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தரை அழைத்த போதிலும் 1638 - 1658 இற்கு இடைப்பட்ட காலத்தில் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களை ஒல்லாந்தர் மன்னனுக்குக் கையளிக்காமையால் இரு சாராரிடையேயும் கருத்து வேறுபாடு தோன்றியமை பற்றி முன்னர் கூறப்பட்டது. 1658 - 1675 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்நாட்டில் ஒல்லாந்தரது கொள்கைகளை முன்னெடுத்துச் சென்ற அதிகாரிகளுக்குக் கண்டி இராசதானியின் வலிமை பற்றி எவ்வித விளக்கமும் இருக்கவில்லை. இதனால் கடல் வழியாகவும் தரை வழியாகவும் அந்த இராசதானியைச் சுற்றிவளைக்கும் நோக்கில் 1659 - 1668 வரையிலான காலப்பகுதியில் அதுவரை கண்டி இராசதானியின் கீழிருந்த கிழக்கு, மேற்குக் கரையோரப் பகுதிகளில் சில ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டன. ஒல்லாந்தரின் இந்த ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளால் அமைதியாக இருந்த இரண்டாம் இராஜசிங்க மன்னன் 1670 ஆம் ஆண்டு தொடக்கம் எல்லா வழிகளிலும் அவர்களைத் தாக்கத் தொடங்கினான். இராஜசிங்க மன்னனின் வழி நடத்துதலால் கண்டியர்கள் மேற்கொண்ட பலம் வாய்ந்த திடீர்த் தாக்குதல் காரணமாக 1658 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒல்லாந்தர் கைப்பற்றிய அனைத்துப் பிரதேசங்களையும் அவர்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இராஜசிங்க மன்னனின் இந்தத் தாக்குதல்கள் கண்டி இராசதானியின் யுத்த வலிமை தொடர்பாகச் சரியான விளக்கத்தைப் பெற்றுக்

கொள்ளவும் கண்டி இராசதானி தொடர்பாக ஒல்லாந்தரது எதிர்கால கொள்கையைத் திட்டமிட்டுக் கொள்ளவும் உதவியாக அமைந்தது. தரைப் பிரதேசத்தில் கண்டி மக்கள் ஒல்லந்தருடன் தோளுடன்தோள் பொருதிப் போராடக்கூடியவர்கள் எனவும் கண்டிப் பிரதேசத்தைக் கைப்பற்ற முயன்றால் போர்த்துக்கேயரைப் போன்று முடிவில்லாத யுத்தத்தினை எதிர்நோக்கவேண்டிய நிலை தமக்கு உருவாகும் என்பதையும் இந்தக் தாக்குதல்கள் மூலம் ஒல்லாந்தர் புரிந்து கொண்டனர். இதன் விளைவாகக் கண்டி இராசதானி தொடர்பாக மரியாதையுடன்கூடிய பயத்துடன் கண்டி இராசதானி மன்னர்களுடன் சமாதானமாக ஒல்லாந்தர் செயற்பட்டனர்.

### கண்டி இராசதானியுடனான தூதுத் தொடர்பு

முதலாம் விமலதர்மசூரிய மன்னனது காலந்தொடக்கம் கண்டி இராசதானிக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே தூதுத் தொடர்பு நிலவியது. இரண்டாம் இராஜசிங்க மன்னனது காலத்தில் குறைந்தது எட்டுப் பேராவது இடையிடையே மன்னனைச் சந்தித்துள்ளனர். இரண்டாம் இராஜசிங்க மன்னனது காலத்தில் நடைபெற்ற தூதுப் பயணங்களில் 1656 ஆம் ஆண்டு ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட் மன்னனைச் சந்தித்தமை மிகவும் முக்கிய சந்தர்ப்பமாகும். இக்காலத்தில் போர்த்துக்கேயர் முற்றாக இலங்கையில் இருந்து அகற்றப்படாமல் இருந்ததுடன் ஒல்லாந்தருக்கும் மன்னனுக்குமிடையே கருத்து வேறுபாடும் நிலவியது. மன்னனின் அழைப்பின் பேரில் கண்டி இராசதானிக்குச் சென்ற ஒல்லாந்தத் தூதுவன் மன்னனால் மிகவும் மரியாதையாக வரவேற்கப்பட்டான். கண்டியர்கள் மிக அலங்கார ஊர்வலத்தில் ஜெனரலை அழைத்துச் சென்றதாக ஒல்லாந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஹல்ப்ட்டின் பண்பட்ட செயல்களும் மரியாதையும் அரசனை மிகவும் கவர்ந்தன.


உரு 1.5 இரண்டாம் இராஜசிங்க மன்னன்

இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்குப் பின்னர் இரண்டாம் விமலதர்மசூரியன், ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன், விஜயராஜசிங்கன் ஆகிய மன்னர்களின் காலத்திலும் இவ்வாறான தூதுப் பயணங்கள் இடம்பெற்றன. இக்காலத்தில் மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டபோது, கடவைகளை மூடுதல் என்பவற்றின் மூலம் இருசாராருக்கும் இடையிலான தொடர்பில் முறிவு ஏற்பட்டபோதும் தூதுப் பயணங்கள் தொடர்ந்தன. இவ்வாறான தூதுப் பயணங்களில் பெரும்பாலும் ஆளுநரின் கடிதங்கள் மன்னனிடம் முன்வைக்கப்பட்டன. மன்னனின் தூதுவர்கள் சில சந்தர்ப்பங்களில் கரையோரப் பிரதேசங்களுக்குச் சென்று ஒல்லாந்தரைச் சந்தித்தனர்.

தூதுப் பயணங்களின்போது இரு சாராரும் பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளுதல், நல்லுறவை வெளிப்படுத்தல், தூதுவர்களின் கோரிக்கைகளுக்கு

மறு பகுதியினர் செவிமடுத்தல், இரு சாராரிடையே ஏற்படும் சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடல் என்பவற்றிற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. ஒல்லாந்த ஆளுநரும் மன்னனும் சந்திப்பது சாத்தியம் குறைவானதால் இரு சாராரதும் கருத்துக்களின் இணக்கப்பாட்டிற்கு இவ்வாறான தூதுப் பயணங்கள், கடிதப் பரிமாற்றம் என்பன உறுதுணையாக விளங்கின. இரண்டாம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தருக்குக் கடிதம் எழுதும்போது தான் இலங்கையின் பேரரசன் என்பதைக் குறிப்பிட்டான். ஒல்லாந்தரும் தமது கடிதப் போக்குவரத்தின்போது மன்னனை 'திரிசிங்களாதிஸ்வர' என்று குறிப்பிட்டனர். ஒல்லாந்தருக்கு மன்னன் கடிதம் எழுதும்போது **எனக்குப் பணி புரியும் அன்பான ஒல்லாந்த இனத்தவர்** போன்ற வாசகங்களை எழுதியதோடு ஒல்லாந்தர் மன்னனுக்குக் கடிதம் எழுதும்போது **தங்களது பணிவுள்ள சேவையாளர்** எனக் குறிப்பிட்டனர். ஒல்லாந்துத் தூதுவர் சிலர் கண்டி இராசதானி மன்னனைச் சந்தித்த முக்கிய விபரங்கள் சில கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.1 ஒல்லாந்தத் தூதுவர்கள் கண்டி மன்னர்களைச் சந்தித்த சில சந்தர்ப்பங்கள்

| வருடம் | கண்டி மன்னர் | ஒல்லாந்தத் தூதுவர் | தூதுப் பயணத்திற்கான காரணம் |
|---|---|---|---|
| 1602 | முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் | ஜோரிஸ் வான் ஸ்பில் பேர்ஜன் | வர்த்தக நடவடிக்கை தொடர்பாக மன்னனுடன் கலந்துரையாடுதல் |
| 1656 | இரண்டாம் இராஜ சிங்க மன்னன் | ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட் | மன்னனைச் சந்திக்கும்படி விடுத்த அழைப்பும் அப்பே நு நி ஷவி ய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுதலும் |
| 1688 | இரண்டாம் விமல தர்மசூரிய மன்னன் | கலன் அல்பஸ் | மன்னுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே புதிய உடன்படிக்கை ஏற்படுத்துதல் தொடர்பாகக் கலந்துரையாடுதல் |
| 1721 | ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் | கொர்னேலியஸ் டெகல் | மன்னனின் மனைவி இறந்தது தொடர்பாக ஒல்லாந்தர் தமது அனுதாபத்தைத் தெரிவித்தல் |

தூதுப் பயணங்களின்போது பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளல்
(1656 ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட்டின் தூதுப் பயணம்)

| ஒல்லாந்தத் தூதுவர் மன்னனுக்கு வழங்கிய பரிசில்கள் | மன்னன் ஒல்லாந்தருக்கு வழங்கிய பரிசில்கள் |
|---|---|
| போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கொடி, இரண்டு குதிரைகள், பாரசீக ஈட்டி வில்லு இரண்டு சோடி, சந்தனக் கட்டை, பாரசீக செம்மறி ஆடுகள் இரண்டும் ஏனைய சில மிருகங்களும் | தங்கச் சங்கிலி, மோதிரம், தங்கப் பாதணி |

## சமாதானக் கொள்கையும் மோதல்களைத் தவிர்த்தலும்

1687 ஆம் ஆண்டில் இரண்டாம் இராஜசிங்க மன்னன் மரணமடைந்ததும் அவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன் ஆட்சிக்கு வந்தான். தந்தையிடமிருந்து உரிமையாகப் பெற்ற அரசைப் பாதுகாக்க இவன் ஒல்லாந்தருடன் நட்புறவுடன் செயற்பட்டான். இருசாராரும் பின்பற்றிய செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன :

- ❖ பர்மாவிலிருந்து உபசம்பதா பிக்குகளை அழைத்து வர ஒல்லாந்தர் கப்பல்களை வழங்கியமை.
- ❖ பிட்டிகல் கோறளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குதல்.
- ❖ மன்னனின் கறுவா, பாக்கு, யானைகள் என்பவற்றை வர்த்தக சங்கத்தின் மூலம் பணம் கொடுத்துப் பெறுவதற்கு உடன்படல்.

இரண்டாம் விமலதர்மசூரிய மன்னனுக்குப் பின்னர் அவனது மகன் வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் ஆட்சிக்கு வந்தான். இவன் குண்டசாலை இளவரசன் எனப்பட்டான். இக்காலத்தில் ஒல்லாந்தருடனான சமாதானம் தொடர்பில் விரிசல்கள் ஏற்பட்டன. மேலும் இக்காலத்தில் கண்டி இராசதானி மன்னன் கற்பிட்டி, புத்தளம் போன்ற துறைமுகங்கள் வழியாகப் பாக்கு, யானைகள், யானைத்தந்தம் என்பவற்றை இந்தியாவுக்கு அனுப்பிக் கூடுதலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தான். இது தமக்குப் பெரும் நட்டம் எனக் கருதிய ஒல்லாந்தர் அனைத்துத் துறைமுகங்களையும் மூடி, கண்டி இராசதானியின் வர்த்தகத்திற்குத் தடையை ஏற்படுத்தினர். இதற்குப் பதிலாக மன்னனும் தனது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தின் வழியாக யானைகளைக் கொண்டு செல்வதைத் தடைசெய்து கறுவா உட்பட வாசனைப் பொருள்கள், கண்டி இராசதானியில் உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகள் என்பவற்றை ஒல்லாந்தருக்கு விற்பதை நிறுத்தினான்.

இக்காலகட்டத்தில் ஒல்லாந்தரது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் ஒல்லாந்தரது செயல்களால் அதிருப்தியுற்றிருந்தனர். அவர்களால் விதிக்கப்பட்டிருந்த கடுமையான வரிகள், வரி வசூலிப்போரால் அளவுக்கு மீறிப் பணம் அறவிடப்பட்டமை, கறுவா உரிப்போர் முகங்கொடுத்த இக்கட்டான நிலை என்பன காரணமாக மக்களின் வெறுப்பு அதிகரித்தது. இதன் காரணமாக ஒல்லாந்த நிருவாகப் பிரதேசங்கள் சிலவற்றில் கலவரம் ஏற்பட்டது. ஒல்லாந்தர் தமது அதிகாரத்தைக் கொண்டு கலகத்தை அடக்கினர்.

ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் தமது முன்னோரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றித் தென்னிந்திய நாயக்க வம்சப் பெண்ணை மணஞ்செய்து அவளைப் பட்டத் திற்குரிய அரசியாக்கினான். இதன் காரணமாக பல நாயக்கவம்சத்தினர் இலங்கைக்கு வந்ததுடன் ஆட்சியில் அவர்கள் உயர் பதவிகளைப் பெற்றுக் கண்டி இராசதானியில் வாழ்ந்து வந்தனர். அரச மாளிகையிலும் அவர்களது அதிகாரம் மேலோங்கி இருந்தது.

1739 ஆம் ஆண்டு வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் இறந்ததும் அவனுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் நாயக்கவம்ச பட்டத்தரசியின் சகோதரனொருவன் ஸ்ரீ விஜயராஜசிங்கன் என்ற பெயரில் அரசனானான். இதற்கமைய முதலாம் விமலதர்ம சூரிய மன்னனுடன் ஆரம்பமான அரச பரம்பரை முடிவுற்றது.

**ஒல்லாந்தர் கண்டி இராசதானியை ஆக்கிரமித்தல்**

ஸ்ரீ விஜயராஜ சிங்க மன்னனின் பின்னர் 1747 ஆம் ஆண்டு அவனது நாயக்கவம்ச பட்டத்தரசியின் சகோதரனான கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் சிங்காசனம் ஏறினான். இவன் அக்காலத்தில் வீழ்ச்சியுற்றிருந்த பௌத்த சமயத்தை வளர்ச்சியுறச்செய்யப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டான். வெலிவிற்ற சரணங்கர தேரர் இதற்காகத் தமது ஒத்துழைப்பை நல்கினார். மன்னன் ஒல்லாந்தரிடமிருந்து கப்பல்களைப் பெற்று உபசம்பதா பிக்குகளை அழைத்து வருவதற்குச் சீய தேசத்திற்குத் தூதுக்கு குழுவொன்றை அனுப்பி வைத்தான். உபாலி தேரரின் தலைமையில் பிக்குகள் சிலர் இங்கு வந்து 1753 ஆம் ஆண்டு இலங்கையில் உபசம்பதாவை நடத்தினர். அன்றிலிருந்து இலங்கையில் தற்போதைய சீயம் நிக்காய ஆரம்பமானது.

கி.பி. 1762 ஆம் ஆண்டளவில் கண்டி இராசதானிக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே மீண்டும் மோதல்கள் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதனால் ஒல்லாந்தருக்கு எதிராக வேறொரு இனத்தவரின் உதவியைப் பெறுவதில் மன்னன் ஆர்வம் காட்டினான். இதன் விளைவாக 1762 ஆம் ஆண்டு ஜோன் பைபஸ் என்ற ஆங்கிலேயன் கண்டி இராச தானிக்குத் தூதுவனாக வந்தான். இதனால் அச்சமடைந்த ஒல்லாந்தர் பெரன் வன் எக் என்ற ஆளுநரின் வழி நடத்தலின் கீழ் ஆறு படைப் பிரிவுகளை உருவாக்கி அவற்றை ஆறு பாதைகளால் அனுப்பி கண்டியை ஆக்கிரமித்தனர். இந்தப் படைப்பிரிவில் ஒன்றேனும் கண்டி நகருக்கு அருகில் வருவதற்கு கண்டி மக்கள் இடந்தரவில்லை. அவர்கள் தமக்கே உரித்தான பழக்கப்பட்ட போர் முறையைப் பயன்படுத்தித் தாக்குதல்களை மேற்கொண்டதால் ஒல்லாந்தரின் எதிர்பார்ப்பு சிதைந்ததுடன் அவர்கள் கரையோரப்

பிரதேசத்திற்கு மீண்டனர். இந்தத் தோல்வியின் பின்னர் அதிக நாட்கள் செல்வதற்குள் 1765 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் மீண்டும் கண்டி இராசதானி ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பில் இரு சாராருக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. 1765 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒல்லாந்தர் கண்டி நகரை அடைந்ததால், மன்னன் பாதுகாப்பிற்காக ஹங்குரன்கெத்த என்ற இடத்திற்குத் தப்பிச் சென்றான். கண்டி நகரைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மன்னன் இணங்கவில்லை. மழைக்காலம் தொடங்கியதும் நோய்களால் பாதிக்கப்பட்டும் கண்டி மக்களின் தாக்குதலாலும் ஒல்லாந்தர் மீண்டும் திரும்பிச் சென்றனர்.



உரு. 1.6 ஒல்லாந்துப் படைவீரர்களின் தோற்றம்

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்ட மோதல்கள் காரணமாக மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்த மன்னன் விரும்பினான்.

அவ்வாறே நாயக்கர்களின் செயல்களினால் பிரதானிகளும் பௌத்த பிக்குகளும் வெறுப்படைந்தனர். இதனை அறிந்த மன்னன் சமாதானத்திற்காக ஒல்லாந்தருக்குத் தூது அனுப்பினான். இதனைப் பயன்படுத்தி, அக்காலகட்டத்தில் இருந்த ஒல்லாந்த ஆளுநரான விலெம் பெல்க் ஒல்லாந்தருக்குச் சார்பான நிபந்தனைகள் பலவற்றை முன் வைத்தான். மன்னர் அதற்கு இணங்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் கி.பி. 1766 ஆம் ஆண்டு 25 உறுப்புரைகளுடனான உடன்படிக்கையில் அவன் கைச்சாத்திட்டான். இந்த உடன்படிக்கையின் உறுப்புரைகளுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

**1766 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் சில சரத்துக்கள் (உறுப்புரைகள்)**

- ❖ யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, கொழும்பு திசாவை, காலி கோறளை, திருகோணமலையைச் சூழவுள்ள பிரதேசங்கள் என்பன ஒல்லாந்தருக்கு உரித்தாகும்.
- ❖ கரையோரம் தொடக்கம் நாட்டின் உட்பகுதியில் ஒரு கவ்வை (6 km) அளவு ஒல்லாந்தருக்கு உரித்தாகும்.

இந்த உடன்படிக்கையின் மூலம் கண்டி இராசதானி தீவுக்குள் அமைந்துள்ள மற்றுமொரு தீவு என்ற நிலையை அடைந்தது. உடன்படிக்கையின் பின்னர் வெகு விரைவில் அதன் விளைவு மன்னனுக்கு விளங்கியது. கரையோரப் பிரதேசங்களை மீண்டும் தனக்குத் தருமாறு மன்னன் கேட்ட போதிலும் ஒல்லாந்தர் அதற்குச் செவி மடுக்கவில்லை. அவர்கள் கரையோரப் பிரதேசங்களில் தமது நிருவாகத்தை உறுதி செய்ததுடன் அப்பிரதேசங்களில் விவசாயத்தையும் கறுவாப் பயிர்ச் செய்கையையும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

1766 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை காரணமாக மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான கருத்து வேறுபாடு அதிகரித்தது. ஒல்லாந்தர் உடன்படிக்கையின் சில நிபந்தனைகளை மீறி, மன்னனுக்கு உரித்தான பிரதேசங்களுக்கு உப்பு வழங்குவதைத் தடை செய்தனர். இதனால் கண்டி மக்கள் மிகவும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகினர்.

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் பின்னர் 1782 ஆம் ஆண்டு அவனின் மனைவியின் சகோதரன் இராஜாதி ராஜசிங்கன் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தான். 1796 அம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததுடன் ஒல்லாந்தரைத் தாக்கி அவர்களுக்கு உரிய பிரதேசங்களைத் தமதாக்கிக் கொண்டதுடன் அவர்களது ஆட்சி முடிவுற்றது.

## 1.2 ஒல்லாந்தரது ஆட்சியில் பொருளாதார, சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகள்.

### ஒல்லாந்தரின் நிருவாகக் கட்டமைப்பு

ஒல்லாந்தர் வர்த்தக சங்கமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததால் ஒல்லாந்தில் இருந்த VOC சங்கத்தின் அதிகாரிகள் குழு ஆசியாவில் ஒல்லாந்த நிருவாகப் பிரதேசம் தொடர்பாகத் தீர்மானத்தை மேற்கொண்ட உயர் குழுவாக விளங்கியது. ஒல்லாந்துக்கும் ஆசியாவுக்கும் இடையே காணப்பட்ட அதிக தூரம் காரணமாக அதுவரை ஒல்லாந்தரின் கீழிருந்த பிரதேசத்தை நிருவகிக்க 1609 ஆம் ஆண்டு வர்த்தக சங்கத்தால் பத்தேவியாவுக்கு ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் பத்தேவிய ஆளுநருக்கு உதவுவதற்கு ஆலோசனைச் சபையொன்றும் நியமிக்கப்பட்டது.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது ஆட்சி நிறுவப்பட்ட பின்னர் இந்நாட்டின் நிருவாக செயற்பாடுகளுக்காக ஒல்லாந்த வர்த்தக சங்கத்தால் தனியான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவ்வாறே அவருக்கு உதவியாக இந்நாட்டில் இருந்த ஒல்லாந்த அதிகாரிகளுடனான விசேட சபை ஒன்றும் நியமிக்கப்பட்டது. இலங்கையில் ஒல்லாந்த ஆளுநரும் உதவிச் சபையும் பத்தேவிய அதிகாரியின் கீழ் இருந்தபோதும், இந்நாட்டில் இருந்த ஆளுநரின் திறமை, ஆளுமை என்பவற்றிற் கேற்பத் தேவையான சந்தர்ப்பங்களில் நேரடியாக ஒல்லாந்திலிருந்த அதிகாரிகளின் குழுவிடமிருந்து தேவையான ஆலோசனை பெறக்கூடியதாக இருந்தது. அக்காலத்தில்

இலங்கை, பத்தேவியா, ஒல்லாந்து என்பவற்றிற்றுக்கு இடையிலான போக்குவரத்துக்கு நீண்ட காலம் எடுப்பதும் தொடர்பாடல் நடவடிக்கைகளில் கஷ்டங்கள் நிலவியமையும் இந்நாட்டிலிருந்த ஆளுநருக்கு அவசர நடவடிக்கைகளின்போது சுதந்திரமாகத் தீர்மானம் எடுக்கக்கூடிய சந்தர்ப்பமாக இருந்தது.

இந்நாட்டிலிருந்த ஒல்லாந்த ஆளுநருக்கும் அவரது ஆலோசனைச் சபைக்கும் இலங்கையில் ஒல்லாந்தரின் கீழிருந்த பிரதேசங்களை நிருவகிக்க அதிகாரம் இருந்தது. அதன்படி குறிப்பிட்ட பிரதேசங்களின் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வரி அறவிடுதல், அதிகாரிகளை நியமித்தல், நிலம் வழங்குதல் என்பவற்றைச் செய்யக்கூடியதாக இருந்தது. ஆளுநர், ஆலோசனைச் சபையின் தீர்மானத்திற்கு அமைய செயற்பட்டார்.

நாட்டில் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்த பிரதேசங்கள் முக்கிய மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை கொமாண்டரிகள் எனப்பட்டன.

**கொழும்புக் கொமாண்டரி**

ஒல்லாந்த ஆளுநரின் கீழ் இது நிருவகிக்கப்பட்டது. கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு உட்பட கரையோரப் பிரதேசம், ஹங்வல்ல, அங்குருவாதொட்ட, மல்வானை, கோட்டைகள் அமைந்த நாட்டின் உட்பிரதேசங்கள் இதன் கீழ் இருந்தன.

**காலிக் கொமாண்டரி**

காலிக் கொமாண்டரியின் செயற்பாடுகளுக்கு, தனியான கொமாண்டர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பெந்தரை ஆறு முதல் மட்டக்களப்பு வரையான கரையோரப் பிரதேசம் மற்றும் அதற்குரித்தான நாட்டின் உட்பகுதிகள் என்பன இந்தக் கொமாண்டரியின் கீழ் இருந்தன.

**யாழ்ப்பாணக் கொமாண்டரி**

யாழ்ப்பாணக் கொமாண்டரியும் தனியான கொமாண்டர் ஒருவரின் கீழ் இருந்தது. புத்தளம் வடக்கிலிருந்து கரையோரமாக யாழ்ப்பாணம் வரையிலும் யாழ்ப்பாணத்திற்கு உரிய பிரதேசம், கிழக்குக் கரையில் மட்டக்களப்பு வரையிலும் ஒல்லாந்தரின் கீழிருந்த பிரதேசங்கள் என்பன யாழ்ப்பாணக் கொமாண்டரிக்கு உரித்தாயின.

காலி, யாழ்ப்பாணக் கொமாண்டரிகளின் கொமாண்டர்கள் இருவரும் கொழும்பு ஆளுநரின் கீழ் செயற்பட வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நடைமுறையில் தமது செயற்பாடுகளில் சுதந்திரமாக இயங்க இவர்களுக்குச் சந்தர்ப்பம் இருந்தது.


ஆளுநருக்கும் கொமாண்டர்களுக்கும் கீழ் இருந்த நிருவாகம் சிவில் நிருவாகம், இராணுவ நிருவாகம், வர்த்தகப் பிரிவு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

சிவில் நிருவாகத்திற்கு ஒவ்வொரு கொமாண்டரியின் கீழும் திசாவனி இருந்தது. திசாவனி கோறளைகளாகவும் கோறளைகள் பற்றுக்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. திசாவனிகளில் பல்வேறு சேவைகளுக்குப் பொறுப்பாக முதலியார்களும் விதானைகளும் இருந்தனர். திசாவனிகளின்செயற்பாடுகளைநடாத்தும்பொறுப்புதிசாவைக்குஇருந்தது. ஒல்லாந்தரின் படை ஒழுங்கமைப்பு இராணுவக் கப்பித்தான்களின் கீழ் செயற்பட்டது. வர்த்தகப் பிரிவு ஒபர் ஹுப்ட் ஏமன் (சிரேஷ்ட வர்த்தகர்) என்ற அதிகாரியின் கீழ் இருந்ததுடன் அவருக்குக் கீழே ஹுப்ட்மன் (நிலங்களின் வருமானத்திற்குப் பொறுப்பானவர்) எனப்படும் வேறு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கமைய ஒல்லாந்தரின் கீழ் நிருவாகச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையைப் பின்வரும் அட்டவணையின் மூலம் அறியலாம்.

ஒல்லாந்த ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் கொழும்புக் கொமாண்டரியின் கீழ் இருந்த இந்த நிருவாகக் கட்டமைப்புக்குச் சமமான வகையில் ஏனைய கொமாண்டரிகளும் கொமாண்டர்களின் கீழ் செயற்பட்டன. ஒல்லாந்தரின் கீழான சிவில் நிருவாக நடவடிக்கை ஒழுங்கமைப்புக்களின்போது திசாவைகளுக்கும் முக்கிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மூன்று கொமாண்டரிகளுக்கும் மூன்று திசாவைகள் இருந்தனர். திசாவைப் பதவிகளுக்கு ஒல்லாந்த இனத்தவர் நியமிக்கப்பட்டதுடன் சிவில் நிருவாகத்தின் கீழ்நிலைப் பதவிகளுக்கு சுதேச அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். கோரளை, முதலி, விதானை, கிராமப்பிரதானி போன்ற பதவிப் பெயர்களைப் போன்று யாழ்ப்பாண பிரதேசத்தில் பாவனையில் இருந்த அதிகாரிகள், கங்காணி, உடையார் போன்ற பழைய பதவிப்பெயர்களும் இவ்வாறு ஈடுபடுத்தப்பட்ட பாராம்பரிய சுதேச உத்தியோகத்தர்களுக்கு சிறந்த உதாரணங்களாகும்.

**நீதிமன்ற நடவடிக்கைகள்**

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்ட அமைப்புக்களின் ஒரு பகுதியான உரோமன் டச்சுச் சட்டம் ஒல்லாந்தர்களிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட கொடையாகும். இலங்கையில் இருந்த சுதேசச் சட்டங்கள், பழக்க வழக்கங்களுக்குப் பொருத்தமானதாக உரோமன் - டச்சுச் சட்டத்தைத் தொகுத்து ஒல்லாந்தர் செயற்படுத்தினர். ஒல்லாந்தர் இங்கு காணப்பட்ட சட்டரீதியான நிறுவனங்களைப் பயன்படுத்தியதோடு புதிய நீதிமன்றத் தொகுதியையும் அறிமுகப்படுத்தினர். அவை பின்வருமாறு :




**ராத்வான் ஜஸ்டிட் மேல் நீதிமன்றம்**

இது ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியின் உயர் நீதிமன்றமாகும். அதன் பிரதானி வுப்ட் அத்மினிஸ்தார் எனும் பெயரால் அழைக்கப்படுவார்.

குற்றச் செயல் தொடர்பான வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்குதல் இங்கு நடைபெற்ற பிரதான செயலாகும். இந்த நீதிமன்றம் மூன்று கொமாண்டரிகளிலும் நிறுவப் பட்டிருந்தது.

**சிவில் ராத் / சிவில் நீதிமன்றம்**

சிவில் ராத் எனும் நீதிமன்றம் ஒல்லாந்தரது ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய கொமாண்டரிகளில் நிறுவப்பட்டிருந்தன. ரிக்ஸ் டொலர் 120 இற்குக் குறைந்த நட்டம் தொடர்பான சிவில் வழக்குகள், விவாகம் தொடர்பான வழக்குகள் என்பன இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டன.

### லான் ராத் / காணி நீதிமன்றம்

லான் ராத் எனும் காணி நீதிமன்றம் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மாத்தறை ஆகிய மத்திய நிலையங்களில் அமைக்கப்படடிருந்தன. திசாவை இந்த நீதிமன்றங்களில் தலைவராக இருந்தார். சுதேச மக்களுக்குக் எளிமையான செலவு குறைந்த இலகுவான நீதிமன்ற முறை என இதனைச் சிலர் குறிப்பிடுவர்.

### பிஸ்கல் நீதிமன்றம் / திசாவை நீதிமன்றம் / கிராம நீதிமன்றம்

ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியில் கீழ்நிலை நீதிமன்றமொன்றாக இந்த நீதிமன்றம் செயற்பட்டது. நிருவாகக் கட்டமைப்பில் கீழ் நிலை உத்தியோகத்தர்களான கிராமத் தலைவர், விதானை, முதலி, கோறளை போன்ற சுதேச அதிகாரிகளுக்குத் தமது பதவிகளுக்கு உரிய சிறு நீதிமன்ற அதிகாரங்கள் இருந்தன. யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் மத்தியில் காணப்பட்ட மரபு வழிச் சட்டதிட்டங்கள், சட்டமாகத் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

### ஒல்லாந்தரின் பொருளாதார நடவடிக்கைகள்

இலங்கையில் தமக்குரிய பிரதேசத்தில் உச்ச இலாபத்தைப் பெறும் வகையில் ஒல்லாந்தர் தமது பொருளாதாரக் கொள்கைகளை செயற்படுத்தினர். ஒல்லாந்தரின் கீழிருந்த ஏனைய ஆசிய நாடுகளை விட இலங்கையில் சிறந்த கறுவா விளைவதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே கறுவாப் பயிர்ச்செய்கை, கறுவா உரித்தல், கறுவா வியாபாரம் என்பவற்றில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர். ஆரம்பத்தில் இயற்கையாகக் காடுகளில் வளரும் கறுவாவை சுதேசிகளைக் கொண்டு உரித்தலில் ஈடுபட்ட ஒல்லாந்தர், பின்னர் கொழும்பு, களுத்துறை, அளுத்கம, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் கறுவாவைப் பயிரிட்டனர். போர்த்துக்கேயர் காலந் தொடக்கம் கறுவா சேகரித்தல், விற்றல் தொடர்பாகச் செயற்பட்ட மகா பத்தே திணைக்களம் ஒல்லாந்தரால் தனிப்பட்ட கப்பித்தான் ஒருவனின் கீழ்க் கொண்டு வரப்பட்டு மிகத்திறமையுடன் செயற்படுத்தப்பட்டது. கறுவா உரித்தலுக்கும் சேகரித்தலுக்கும் மரபு ரீதியான இராஜகாரிய முறை பயன்படுத்தப்பட்டது. கறுவா உரிப்போரின் பெயர்களைப் பதிவேட்டில் பதிந்து அவர்களிடமிருந்து உச்சப் பயனைப் பெறுவதற்கு ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர். வயதுவந்த கறுவா உரிப்போர் குறிப்பிட்ட கறுவாத் தொகையை சங்கத்திற்கு ஆண்டுதோறும் இலவசமாகக் கொடுக்கவேண்டியிருந்தது. இவ்வாறு கறுவா வர்த்தகத்தின் மூலம் ஒல்லாந்தர் பெருமளவு வருமானத்தைப் பெற்றனர்.

கறுவா தவிர பாக்கு, முத்து, யானைத்தந்தம், மிளகு, சாதிக்காய், ஏலம், யானை, தேன் மெழுகு என்பவற்றின் மூலமும் ஒல்லாந்தர் இலாபம் அடைந்தனர். இவை தவிர நிலங்களில் இருந்து அறவிடப்பட்ட வரியையும் அவர்கள் முக்கியமானதாகக் கருதினர். காணி உரிமை, அதிலிருந்து பெற வேண்டிய வரி போன்ற விபரங்கள் அடங்கிய **தோம்பு** எனப்பட்ட விசேட பதிவேட்டினைப் போர்த்துக்கேயர் தயாரித்திருந்தனர். ஒல்லாந்தர் அதனை மேலும் முறைமைப்படுத்திக் குடும்பம், காணி, பாடசாலை என மூன்று

முறையான **தோம்பு** (Thombo) தயாரித்தனர். குடும்பத் தோம்பில் கிராமமொன்றில் வாழும் குடும்பங்களின் விபரம் அடங்கியிருந்தது. காணி தொடர்பான தோம்பில் கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளின் விபரம், பயிர் வகைகள், சங்கத்திற்கு வர வேண்டிய வரி என்பன அடங்கியிருந்தன. பாடசாலை தோம்பில் கிராமத்திலுள்ள பெற்றோரின் பெயர்கள், பிள்ளைகளின் பிறந்த திகதி, பாடசாலையை விட்டு விலகிச் சென்ற திகதி, வேறு கிராமங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றால் அந்தத் திகதி என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.

**ஒல்லாந்தரின் நிலத் தோம்பில் அடங்கிய விடயமொன்று**

- இரத்மலானை, தொன் பஸ்தியன் அப்புகாமிக்குச் சொந்தமான நிலம் தென்னை மரங்கள் 195. அறவிட வேண்டிய வரி ரிக்ஸ் டொலர் 1 ஸ்டய்வர் 24.

தோம்பு தயாரிக்கப்பட்டதன் மூலம் கிராமத்திலுள்ள மக்கள் தொகை, நிலம் பயிர்ச்செய்கை தொடர்பான விபரம் போன்ற தகவல்களைப் பெறுவதன் மூலம் சங்கத்தால் அறவிடக்கூடிய வரி, பெறக்கூடிய சேவை பற்றிய விபரங்களை ஒல்லாந்தரால் பெறக்கூடியதாக இருந்தது.

நெல், புடைவை என்பனவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வர்த்தக சங்கத்திற்கு செலவாகும் பணத்தைக் குறைப்பதற்கும் இந்நாட்டின் பாவனைக்கு அல்லது வர்த்தகத்திற்குப் பயன்படுத்தக்கூடியவற்றை இங்கே உற்பத்திசெய்வதன் மூலம் மேலதிக இலாபத்தைப் பெறுவதற்கும் ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர். அதற்கான உதாரணங்கள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

- முத்துராஜவெலயை விளைநிலமாக்க நடவடிக்கை எடுத்தமை.
- யோத வாவி, கந்தளாய் குளம் என்பனவற்றைப் புனர்நிர்மாணம் செய்ததன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முயன்றமை.
- கரும்பு, மிளகு, ஏலம், கோப்பி, முசுக்கட்டை (மல்பரி), அவுரிச் செடி (நீலச்சாயம் பெறல்) ஆகிய பயிர்ச்செய்கைகளை முன்னேற்றுதல்.
- நெசவுத் தொழில், துணிகளுக்கு சாயமிடுதல், ஓடு, செங்கல் தயாரித்தல் ஆகிய கைத்தொழில்களை ஊக்குவித்தல்.
- ஹமில்டன் கால்வாய் போன்ற கால்வாய்களை அமைத்து அவற்றைப் பொருள்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்துதல்.
- யாழ்ப்பாண பிரதேசத்தில் புகையிலை உற்பத்தி மற்றும் பனைமரக் கட்டைகளை ஏற்றுமதி செய்தல்.



உரு 1.7 கொழும்பு ஹமில்டன் கால்வாய்

## சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகள்

### சமயக் கொள்கை

புரட்டஸ்தாந்து மதம் ஒல்லாந்தரது மதமாக விளங்கியது. கரையோரப் பிரதேங் களைக் கைப்பற்றிய பின்னர் அங்கு தமது சமயத்தைப் பரப்புவதற்கு அவர்கள் பல வழிமுறைகளைக் கையாண்டனர். மக்களைப் புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாற்றுவதற்கு ஒல்லாந்திலிருந்து பாதிரிமாரை வரவழைத்தனர். ஒல்லாந்தரின் கீழிருந்த கொழும்பு, காலி போன்ற பிரதேசங்களில் போன்று யாழ்ப்பாணம், அச்சுவேலி மற்றும் மணற்காடு போன்ற பல பிரதேசங்களிலும் ஒல்லாந்தரால் நிர்மாணிக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் அல்லது அவற்றின் சிதைவுகளை தற்போதும் நாம் காணக் கூடியதாயுள்ளது.

### கல்வி நடவடிக்கை

ஒல்லாந்தர் தமது சமயத்தைப் பரப்புவதற்கு இஸ்கூல் எனும் விஷேட நிறுவன மொன்றை ஆரம்பித்தனர். பல கிராமங்களுக்கென ஒரு பாடசாலையை நிறுவி அப்பிரதேசத்தின் பிள்ளைகளை அப்பாடசாலைக்குக் கட்டாயமாக வரும்படி கூறினர். பிள்ளைகளின் தாய் மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டது. புரட்டஸ்தாந்து சமயத்திற்குப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் பிரதான இடம் அளிக்கப்பட்டது. இது தவிர தாய்மொழி, சங்கீதம், இறையியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டதுடன் முறையான பரீட்சை முறையும் ஆரம்பமானது. பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கு அவர்கள் அதிகாரிகளின் குழுவொன்றையும் நியமித்தனர்.

ஐரோப்பியரின் பிள்ளைகளின் கல்விக்கு தனியான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பில் நிறுவப்பட்ட செமனேரி மூலம் ஒல்லாந்த மொழியில் உயர் கல்வி அளிக்கப்பட்டது. அதேபோன்று யாழ்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களிலும் ஒல்லாந்தரால் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு பாடசாலைகள் மூலம் வழங்கப்பட்ட கல்வியின் மூலமும் அரச பதவிகள், கௌரவப் பெயர்கள் என்பன மூலமும் கூடுமானவரையில் மக்களைத் தமது சமயத்திற்கு மாற்றிட ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர்.

கி.பி. 1739 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் முதன்முதலாக அச்சியந்திரமொன்றை இந்நாட்டிற்குக் கொண்டுவந்ததுடன் அதன் மூலம் வேதாகமத்தின் சில பகுதிகளை அச்சிட்டு விநியோகித்தனர்.

### ஒல்லாந்தர் ஆட்சியின் சமூகப் பண்பாட்டுத் தாக்கங்கள்

ஒல்லாந்தர் 138 வருடங்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஆட்சி செய்தனர். ஒல்லாந்தரது ஆட்சியால் அவர்களது சமூகப் பண்பாடுகள் எமது நாட்டிலும் பல துறைகளில் தாக்கம் செலுத்தின. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம் :

- உரோமக் கட்டடக் கலையைப் பின்பற்றி விறாந்தை, மேல்மாடி, தூண்கள், உயர்ந்த கூரை என்பனவற்றைக் கொண்ட வீடுகள் அமைத்தல்.
- பலவித உணவு வகைகள் அறிமுகமாதல்.
  உதாரணம் - கேக், அச்சாறு, கொக்கிஸ்
- நீதிமன்ற முறை அறிமுகமாதல்.
- இந்நாட்டு சமுதாயத்தில் பறங்கியர் என்ற இனம் தோற்றம் பெறல்.
- சிங்கள, தமிழ் மொழிகளில் பல ஒல்லாந்து சொற்கள் கலந்தமை. பின்வரும் சொற்கள் அதற்கு சில எடுத்துக்காட்டாகும்.

| கட்டடம், வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் | சட்டம் நீதிமன்றம் | ஏனையவை |
|---|---|---|
| அலுமாரி | நொத்தாரிஸ் | வெந்தேசி |
| கேத்தில் | தோல்க்க | சாக்கு |
| ஜன்னல் | தோம்பு | இஸ்கூல் |
| இஸ்தோப்பு | | குவிதான்சி |
| சொல்தர | | கந்தோர் |
| தரப்பு | | ஒப்பு |
| பால்க்க | | இலாச்சி |
| காமர | | பூதல் |
| இஸ்குருப்பு | | மோல |
| | | பிசுக்கால் |
| | | தொம்பகர |
| | | உலாந்தை |



உரு. 1.8 இலங்கையில் ஒல்லாந்தரது கட்டடக் கலை




உரு 1.9 ஒல்லாந்தரின் பீங்கானும் நாணயமும்

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளுக்கு அமைய குறு வினாக்கள் தயாரிக்கவும்

1. கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சியிக்குட்படுதல்
2. ஒல்லாந்தர் கண்டி இராசதானியுடன் கொண்ட தொடர்புகள்
3. ஒல்லாந்தரது நிருவாக நடவடிக்கைகள்
4. ஒல்லாந்தரது சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகள்



## செயற்பாடு

1. இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல் என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு வினா - விடைப் போட்டியொன்று நடாத்துக.

2. ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தில் இந்நாட்டின் பண்பாட்டுடன் இணைந்த புதிய அம்சங்கள் தொடர்பாகப் பின்வரும் தலைப்புகளுக்கு அமையப் பேச்சு ஒன்றை வகுப்பில் முன் வைக்குக.

   சொற்கள் / உணவு, பான வகைகள்  
   ஆடையணிகள் / பயன்படுத்திய பல்வகைப் பொருள்கள்